# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,508 — 1965 සැප්තැම්බර් 17 වැනි සිකුරාදා — 1965.9.17

14,508 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 301 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 3<sup></sup>03 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 304 |


கவனிக்க.—1963, சனவரி முதல் யூன் வரையுள்ள காலத்திற்கு இலங்கை அரசாங்க வர்த்தமானியின் அட்டவணை இலக்கங்கள் 13,457 தொடக்கம் 13,690 வரை அனுபந்தமாக இந்த இதழில் கொடுக்கப்பட்டுள்ளது.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

கொழும்பு உபபிரிவின் கீழ் உள்ள இரத்மலானை நீர்ப்பாசன இலாகா வீடமைப்புத் திட்டத்திற்கு வடிகால் அமைக்கும் ஒழுங்கு வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 1 ல் உள்ள செயலகத்தின் 355 ம் இலக்க அறையிலுள்ள காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் கேள்விப் பத்திரச்சபைத் தலைவர் அவர்களால் 1965 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

நீர்ப்பாசனப் பகுதியில் ரூபா 1,00,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர் மட்டுமே மேறபடி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். யாவத்தை வீதியிலுள்ள பெரும்பிரிவு நீர்ப்பாசனப பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட இரு பிரதிகொண்ட விண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப் படவேண்டும்.

கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்தில் அல்லது கொழும்பைத் தவிர்ந்த ஏனைய கச்சேரியொன்றில் ரூபா 250 கேள்விப்பத்திரக்கட்டுப்பணமாக கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 1965 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ம் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக நேரங்களில் விண்ணப்ப பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிகமான விபரங்களை யாவத்தை வீதியிலுள்ள பெரும்பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டி. யே. ராமநாயக்கா,
நீர்ப்பாசன அதிபருக்காக.

9-607—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

---

### நீர்ப்பாசனத் திணைக்களம்

#### ஹக்வட்டுன ஓயா திட்டம்

ஹக்வட்டுன ஓயா திட்டத்தில் கீழ்க்காணும் இரு வேலைகளுக்காக கேள்விப் பத்திரங்கள் வடமேல் மாகாண குருநாகல் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப் படும். அதன் பின் உடன் திறக்கப்படும்.

| வேலையின் பெயர் | கொந்துருத்துக்காரரின் பதிவுத் தொகை ரூ. | ச. | கேள்விக் கட்டணம் ரூ. | ச. |
|---|---|---|---|---|
| 1. வலது பக்க வாய்க்காலில் 5 மைல் 0 சங்கிலியிலிருந்து 5 மைல 27 சங்கிலிவரையும் வெட்டுதல் | 34,000 | 0 .. | 50 | 0 |
| 2. வலது பக்க வாய்க்காலில் 5 மைல் 27 சங்கிலியிலிருந்து 6 மைல் வரையும் வெட்டுதல் | 46,000 | 0 .. | 50 | 0 |

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேல் குறிக்கப்பட்ட தொகைக்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செயயப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டும் இக்கேள்விகள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் வடமேல் மாகாண பிரிவின் கீழ் உள்ள எல்லா நீர்ப்பாசனப் பொறியியலாளரின் கந்தோரில் அலுவலக நேரங்களில் 1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ம் திகதிவரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியினராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதியையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்பதற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளருக்கு பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் மேற்கூறிய நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் மேற்தாப்பட்ட தொகைக்கு கேள்விக் கட்டணமாக செலுத்தப்படல் வேண்டும். இக்கேள்விக் கட்டணத்தை ஒரு கச்சேரியில் செலுத்தி பற்றுச்சீட்டை காட்டினாலும் போதுமானது.

இக்கேள்வியை பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் ஹக்கட்டுன ஓயா திட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. சிவலிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
ஹக்வட்டுன ஓயா திட்டம்.

மருள்பொத்த,
1965 ம் ஆடு செப்டம்பர் மீ 8 ந் உ.

9-601—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

## நீர்ப்பாசன இலாகா

பதுளை நீர்ப்பாசன உப பிரிவின் கீழ் உள்ள அம்பவெல குளத்திட்டத்தில் பிரதான அணைக்கட்டும் பீலிவானும் பாலமும் ஆகிய வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 1 ல் உள்ள செயலகத்தின் 355 ம் இலக்க அறையிலுள்ள காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் கேள்விப் பத்திரச் சபைத்தலைவர் அவர்களால் 1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனப் பகுதியில் ரூபா 1,00,000/- க்கும் அதற்கு மேலும் பதிவு செய்துள்ள மண்வேலைக்கான போதிய இயந்திரங்கள் வைத்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே மேற்படி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். பண்டாரவளையிலுள்ள ஊவா பகுதியில் பெரும்பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட இரு பிரதி கொண்ட விண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்தில் அல்லது கொழும்பைத் தவிர்ந்த ஏனைய கச்சேரியொன்றில் ரூபா 250/- கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாகக் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8 ந் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக நேரங்களில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிகமான விபரங்கள் பண்டாரவளையில் உள்ள பெரும்பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டொ. யா. ராமநாயகா,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு,
1965 ம் ஆண்டு செப்டம்பர் மீ 11 ந் உ.

9-712— 17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

---

## தபாற் தந்திப் பகுதி

மூடப்பெற்ற உள்ளூர் உடற்கோப்புடன் நடுத்தரப்பாரமுள்ள வலப்பக்கச் சாரதி இயக்கத்தையுடைய (எட்டு) 8 லொறிகளை அளிப்பதற்கும் அவற்றை விநியோகஞ்செய்வதற்குமான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 1, பொது வேலை தபாற் தந்தி அமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் பதின்மூன்றாந் திகதி மு. ப. 11 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் இல. 259, காலி வீதி, கொள்ளுப்பிட்டி என்ற விலாசத்திலுள்ள தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்திலுள்ள தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து இக்கேள்விப்பத்திரங்களின் விபரங்கள் அறியலாம், தகவல்கள் பெறலாம், பரிசீலனை செய்யலாம்.

3. எந்தத் தபாற் கந்தோர்த் தலைவரிடமும் கேள்விப்பத்திரப் பொறுப்புப்பணமாக ரூபா 100 கட்டிப்பெற்ற பற்றுச் சீட்டை தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியர் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்களுக்கே கேள்விப்பத்திர சாதனங்கள் 1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ந் திகதி பி. ப. 4 மணிவரை வழங்கப்படும்.

ஏ. எல். பெரேரா,
தபாற் தந்தித் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1,
1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 9 ந் உ.

9-702—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

---

## சமூக சேவைத் திணைக்களம்

கீழ்க்காணும் அட்டவணைகளில் கொடுக்கப்பட்ட பொருட்களை சீதுவை குருடர், செவிடர் வேலைத்தலத்திற்கு 1.10.65 தொடக்கம் 30.9.66 வரை விநியோகம் செய்வதற்கான அரக்குமுத்திரை இடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1965 ம் ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 30 ம் திகதி மு. ப. 10 மணி வரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்

### தேவையான பொருட்கள்

அட்டவணை 1

1. 2/20 வெள்ளை கனிநூல் (வெள்ளையாக்கப்பட்ட)
2. 2/30 ,, ,,
3. 1/50 ,, ,,
4. 1/16 ,, ,,
5. 2/20 சுத்தம் செய்யாத கனிநூல் (நரை)
6. 2/30 ,, ,, ,,
7. 2/40 ,, ,, ,,
8. 1/20 ,, ,, ,,
9. 1/16 ,, ,, ,,
10. 1/20 நிறக் கனிநூல் (நிறம்)
11. 2/20 ,, ,,
12. 2/30 ,, ,,
13. 2/40 ,, ,,
14. 2/100 ,, ,,
15. 1/16 ,, ,,
16. 1/20 ,, ,,
17. 1/50 ,, ,,

அட்டவணை 2

1. சிங்கப்பூர் முழுப் பிரம்பு.
2. பெரும் பிரம்பு.

அட்டவணை 3

1. பின்னல் கனிநூல்.
2. இரண்டு இழை பின்னல் கம்பளி நூல்.
3. மூன்று இழை பின்னல் கம்பளி நூல்.
4. நான்கு இழை பின்னல் கம்பளி நூல்.

2. அட்டவணையில் இருக்கும் பொருட்களுக்கு ரூபா 50/- கேள்விப் பணமாக எனது அலுவலகத்திலோ அல்லது ஒரு கச்சேரியிலோ கட்டிப் பற்றுச்சீட்டைப் பெற வேண்டும். அப்பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தே கேள்விப்பத்திரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெறலாம்.

3. கேள்விப்பத்திரத்தில் பிணைக்கப்பட்ட அட்டவணையில் விலைகளை எண்ணிலும் எழுத்திலும் விளக்கமாக எழுதப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் இவ்வலுவலகத்திலிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடப்படலாம், அல்லது பதிவுத் தபால் மூலம் இடது பக்க மேல் கோடியில் "கனிநூல் முதலியன விநியோகம் செய்வதற்கான கேள்விப் பத்திரம் " எனக் குறிக்கப்பட்டு அனுப்பப்படலாம்.

5. சித்தியெய்தும் கேள்விக்காரர், சீதுவை செவிடர், குருடர் வேலைத்தலப் பொது முகாமையாளரின் இரண்டு கிழமை அறிவித்தலில் பொருட்களை விநியோகம் செய்யக்கூடியவராய் இருத்தல் வேண்டும். அப்படிச் செய்யாவிடில் இவ்வொப்பந்தம் ரத்துச் செய்யப்படுவதோடு, கட்டுப்பணத்தையும் இழப்பர். அத்துடன் தவறேற்படும் அரசாங்க ஒப்பந்தக்காரர் பட்டியலில் அவருடைய பெயரும் சேர்க்கப்படும்.

6. 1965 ம் ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 30 ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர்கள் சமூகம் கொடுக்கலாம்.

7. இக்கேள்வி பற்றிய மேலும் விபரங்களைக் கீழ்க்காணும் சமூக சேவை அதிபரிடமிருந்தோ, அல்லது சீதுவை செவிடர், குருடர் வேலைத்தலப் பொது முகாமையாளரிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

ஆர். எல். திருச்செல்வம்,
சமூக சேவை அதிபர்.

சமூக சேவைத் திணைக்களம்,
கீழ் வாவித் தெரு,
த. பெ. 577,
கொழும்பு,
1965 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 13 ந் உ.

9-770/1— 17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

## சமூக சேவைப் பகுதி

1965, ஒக்ரோபர் 1 ம் திகதிக்கும் 1966, செப்டெம்பர் 30 ம் திகதிக்கும் இடையில், சீதுவை செவிடர் குருடருக்கான வேலைத்தலத்திற்கு பாண், மற்றும் இனிப்புத் தீன் பண்டங்கள் முதலியவற்றை விநியோகம் செய்வதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தக் கேள்விகள் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் 1965, செப்டெம்பர் மாதம் 30 ந் திகதி மு. ப. 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

எந்தக் கச்சேரியிலேனும் ரூபா 25 செலுத்தி அதற்குப் பெறும் பற்றுச் சீட்டைக் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்குக் காட்டி உரிய மாதிரிப் பத்திரங்களைப் பெற்று அவற்றின் மேலேயே ஒப்பந்தக் கேள்விகள் விண்ணப்பிக்கப்படவேண்டும்.

எஸ். எஸ். சூரியகொட,
பதில் பொது முகாமையாளர்.

செவிடர் குருடருக்கான வேலைத்தலம்,
சீதுவை,
1965 ம் ஆம் செப்டெம்பர் மீ 13 ந் உ.

9–770/2—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

---

## சமூக சேவைப் பகுதி

### சீதுவை செவிடர் குருடருக்கான வேலைத்தலங்கள்

1965, ஒக்ரோபர் 1 ந் திகதிக்கும் 1966, செப்டெம்பர் 30 ந் திகதிக்கும் இடையில் இத்தாபனத்தின் அழுக்குத் துணிகளைக் கழுவுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தக் கேள்விகள் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் 1965, செப்டெம்பர் மாதம் 30 ந் திகதி மு. ப. 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

எந்தக் கச்சேரியிலேனும் ரூபா 25 கட்டி அதற்குப் பெறும் பற்றுச்சீட்டைக் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்குக் காட்டி உரிய மாதிரிப்பத்திரங்களைப் பெற்று அவற்றின் மேலேயே ஒப்பந்தக்கேள்விகள் விண்ணப்பிக்கப் படவேண்டும்.

எஸ். எஸ். சூரியகொட,
பதில் பொது முகாமையாளர்.

செவிடர் குருடருக்கான வேலைத்தலம்,
சீதுவை,
1965 ம் ஆம் செப்டெம்பர் மீ 13 ந் உ.

9–770/3—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## காட்டுத் திணைக்களம்

### ஏல விற்பனை

ஏறுவூர் புகையிரத நிலையத்தில் இருக்கும் 676·6 கன அடி கொண்ட 58 தேக்க, மஞ்சள்கடம்பை, கல்ஒதி, சவண்டலை முதலிய மரங்கள் மட்டக்களப்பு வன பரிபாலன அதிகாரியால் 4.10.1965 காலை 10 மணிக்கு ஏறுவூர் புகையிரத நிலையத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கேட்க விரும்புவோர் ஏல விற்பனைக்கு முன்பதாகவே மரங்களைப் பார்வையிடும்படி கோரப்படுகின்றனர்.

ஏல விற்பனை பற்றிய முழு விபரங்களும் கீழ் கையொப்பமிட்டவரிடமோ அல்லது ஏறுவூர் புகையிரத நிலையத்தில் உள்ள வன ஓவசியரிடமோ பெற்றுக்கொள்ளலாம்.

க. அருள்செல்வம்,
மாவட்ட வன பரிபாலன அதிகாரி,
மட்டக்களப்பு.

மாவட்ட வன பரிபாலன காரியாலயம்,
மட்டக்களப்பு,
1965 ம் ஆம் செப்டம்பர் மீ 3 ந் உ.

9–701—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

---

## சௌக்கியப் பகுதி

### பால் பண்ணை மனநோய் வைத்தியசாலை, அங்கொடை
### கால்நடை பொது ஏல விற்பனை

கீழ்க்காணும் கால்நடைகள் 1965 ம் ஆண்டு ஒக்ரோபர் (ஐப்பசி)மாதம் 6 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அங்கொடை மனநோய் வைத்தியசாலையில் உள்ள பால் பண்ணையில் பொது ஏல விற்பனைக்கு விடப்படும்.

| கால்நடைகளின் இல. | விபரம் | ரகம் |
|---|---|---|
| 105 | பசு | அயிர்சயின் (கலவன்) |
| 113 | ஷை | ஷை |
| 131 | ஷை | ஷை |
| 134 | ஷை | ஷை |
| 143 | ஷை | ஷை |
| 145 | ஷை | ஷை |
| 164 | ஷை | ஷை |
| 188 | ஷை | யேர்சி (கலவன்) |
| 201 | ஷை | ஷை |
| 167 | நாம்பன் | யேர்சி (அசல்) |
| 194 | ஷை | யேர்சி (கலவன்) |
| 147 G | நாம்பன் கன்று | ஷை |
| 150 E | ஷை | ஷை |
| 154 E | ஷை | ஷை |
| 154 F | ஷை | ஷை |
| 154 G | ஷை | ஷை |
| 156 F | நாம்பன் (கன்று) | யேர்சி (கலவன்) |
| 157 D | ஷை | ஷை |
| 171 E | ஷை | ஷை |
| 191 B | ஷை | ஷை |
| 204 A | ஷை | ஷை |
| 204 B | ஷை | ஷை |
| 209 A | ஷை | ஷை |

இம் மிருகங்களை அங்கொடை வைத்தியசாலையில் வேலை நாட்களில் பால் பண்ணை பதில் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

ஏலத்தில் வெற்றிபெற்ற கேள்விக்காரர்கள் விற்பனை முடிவில் முழுத் தொகையையும் செலுத்தி மிருகங்களை உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டும்.

கேள்வி முறையின்றி கேள்விகளை நிராகரிக்கவோ, தற்காலிகமாக நிறுத்தவோ, தள்ளுபடி செய்யவோ, வைத்திய அட்சகருக்கு உரிமையுண்டு.

மேலதிகமான விபரங்களை அங்கொடை மனநோய் வைத்தியசாலையில் இருக்கும் பால் பண்ணை பதில் அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

யே. சொ. பெ. அபயவர்த்தன,
பதில் வைத்திய அட்சகர்.

மனநோய் வைத்தியசாலை,
அங்கொடை.

9–745—17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

# நானாவித அறிவித்தல்கள்

## பொதுவேலைத் திணைக்களம்

### போட்டி

### 1967—கனடா, மொன்றீல் சர்வதேச் பொருட்காட்சியில் இலங்கைத் தேசிய படமாடத்திற்கு வேண்டிய பல்வண்ணச் சுவர் ஓவியங் கொண்ட பீங்கான் அடைசு பலகை

பல்வண்ணச் சுவர் ஓவியமாக பீங்கானில் வடிக்கப்படத்தக்கதான ஓவியங்கள் சித்தரிக்கப்பெற்ற அடைசுபல்கைக்காய விண்ணப்பங்கள் 30.11.65 செவ்வாய்க்கிழமை பி. ப. 4.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். இவ் அடைசுபலகை பிரதான வாயிலின் அருகே இலங்கைத் தேசிய படமாடத்திற்கு வெளியே தனித்திருக்கும். 27 அடி நீளமும் 10 அடி உயரமும் கொண்டதாய் இருக்கும். உலக அமைப்பில் இலங்கையின் நிலையை அலங்காரமான படவடிவில் காட்டுவதாய் அமைந்த சிறந்த சேர்க்கையாக வடிவ அமைப்பு இருத்தல் வேண்டும். மேலும் இவ்வடிவ அமைப்பு நாட்டின் இயற்கைத் தோற்றத்தையும் எழில் வாய்ந்த அதன் கவர்ச்சியையும் பெரிய அளவில் சேர்க்கை வடிவ அமைப்புக்குள்ளேயே ஒருங்கே சித்தரிப்பதாக அமையவேண்டும்.

வடிவ அமைப்பு உயர்ந்த தரமும், சிறந்த படைப்புமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தெரிந்தெடுக்கப்படும் வடிவ அமைப்பு இந் நாட்டின் கலைத்திறனை எடுத்தோதுவதாயும், நாட்டின் பெருமைக்கு ஏற்றதாயும் இருக்குமென நம்பப்படுகிறது.

கீழ்வரும் பரிசில்கள் வழங்கப்படும் :—

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | .. | ரூபா 2,500/- |
| இரண்டாவது பரிசு | .. | ரூபா 1,000/- |
| மூன்றாவது பரிசு | .. | ரூபா 500/- |

வேண்டிய வேறு விபரங்களுக்குப் பின்வரும் முகவரிக்கு உடனே எழுதவும் :—

தலைமைச் சிற்ப வல்லுனர்,
பொதுவேலைத் திணைக்களம்,
கொழும்பு 1.

9-769— 17.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,508

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை காகித ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.